# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2024 – 2025

## வளர்தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

Tamil Education Development Council
France

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. கீரிமலையில் அமைந்துள்ள ஈச்சுரம்

அ ) திருக்கேதீச்சுரம் ☐ ஆ ) முன்னேச்சுரம் ☐

இ ) தம்பலேச்சுரம் ☐ ஈ ) திருக்கோணேச்சுரம் ☐

2. காலப்பெயருக்கு எடுத்துக்காட்டு

அ ) நடத்தல் ☐ ஆ ) பழம் ☐

இ ) மாதம் ☐ ஈ ) நூல் ☐

3. மணிபல்லவம் இன்று ______________ என அழைக்கப்படுகிறது.

அ ) கொழும்பு ☐ ஆ ) நயினாதீவு ☐

இ ) கல்யாணி ☐ ஈ ) கந்தரோடை ☐

4. காகிதம் ______________ இருந்து செய்யப்படுகிறது.

அ ) தாளில் ☐ ஆ ) ஓலையில் ☐

இ ) வைக்கோலில் ☐ ஈ ) இலையில் ☐

5. உயிரை விட மானமே பெரிதென உயிர் நீத்த மன்னன்

அ ) செங்கணான் ☐ ஆ ) இரும்பொறை ☐

இ ) சேரலாதன் ☐ ஈ ) பாரி ☐

6. மக்களின் புறத்தோற்ற வளர்ச்சியினை ______________ என்பர்.

அ ) ஒழுக்கம் ☐ ஆ ) விருந்தோம்பல் ☐

இ ) நாகரிகம் ☐ ஈ ) பண்பாடு ☐

7. இறந்தகாலத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) படித்தாள் ☐ ஆ ) படிப்பாள் ☐

இ ) படிக்கிறாள் ☐ ஈ ) படி ☐

8. ‘‘பட்டி பெருக வேணும் தம்பிரானே..’’ என்ற பாடல்

அ ) அறுவடைப்பாடல் ☐ ஆ ) ஏர்ப்பாடல் ☐

இ ) காதற்பாடல் ☐ ஈ ) தாலாட்டுப்பாடல் ☐

9. மெய்யெழுத்துகள்

அ ) 18 ☐ ஆ ) 217 ☐

இ ) 12 ☐ ஈ ) 247 ☐

10. நீ + ஐ

அ ) எங்களை ☐ ஆ ) என்னை ☐

இ ) உன்னை ☐ ஈ ) உங்களை ☐

11. குடிமக்கள் எல்லாம் மன்னனின் ____________ நோக்கி வாழ்வர்.

அ ) கொடுங்கோலை ☐ ஆ ) செங்கோலை ☐

இ ) கடுங்கோலை ☐ ஈ ) கருங்கோலை ☐

12. தோட்டத்தில் மிளகாய்ச்செடிகள் ____________ க் காணப்படுகின்றன.

அ ) வரிசைவரிசையாக ☐ ஆ ) பாளம்பாளமாக ☐

இ ) குலைகுலையாக ☐ ஈ ) சாரிசாரியாக ☐

13. மரத்திலிருந்து பழங்கள் கீழே விழுந்தன. இச்சொல்லியத்தின் எழுவாய்

அ ) கீழே ☐ ஆ ) மரம் ☐

இ ) பழங்கள் ☐ ஈ ) விழுந்தன ☐

14. விளைந்த நெல் உழவரால் அறுவடை

அ ) செய்தனர் ☐ ஆ ) செய்யப்பட்டது ☐

இ ) செய்கிறார்கள் ☐ ஈ ) செய்தார்கள் ☐

15. கடற்கரை என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) கடற் + கரை ☐ ஆ ) கடல்க் + கரை ☐

இ ) கடல் + கரை ☐ ஈ ) கட + கரை ☐

16. 'ஒ' என்ற எழுத்து

அ ) உயிர்மெய்யெழுத்து ☐ ஆ ) மெய்யெழுத்து ☐

இ ) ஆய்தஎழுத்து ☐ ஈ ) உயிரெழுத்து ☐

17. சூரத்தீசனை வெற்றிகொண்ட தமிழ் மன்னர்கள்

அ ) தேவநம்பியதீசன், காமினிஅபயன் ☐ ஆ ) சேனன்,குத்திகன் ☐

இ ) அசேலன்,தேவநம்பியதீசன் ☐ ஈ ) எல்லாளன், சேனன் ☐

18. இயற்கைத்துறைமுகம் அமைந்துள்ள இடம்

அ ) வவுனியா ☐ ஆ ) திருகோணமலை ☐

இ ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) மன்னார் ☐

19. ஒரே பொருள் தரும் இரண்டு சொற்கள்

அ ) மகிழ்ச்சி,வறுமை ☐ ஆ ) ஞாயிறு,வானம் ☐

இ ) உவகை,உலகம் ☐ ஈ ) வையகம்,உலகம் ☐

20. நெல்சன் மண்டேலா நாளாக ஐ.நா அறிவித்துள்ள நாள்

அ ) யூலை 5 ☐ ஆ ) யூலை 18 ☐

இ ) யூலை 12 ☐ ஈ ) யூலை 8 ☐

21. பின்வருவனவற்றுள் பொது நிலையம்

அ ) இல்லம் ☐ ஆ ) வீடு ☐

இ ) மனை ☐ ஈ ) நூலகம் ☐

22. மாணவர்கள் என்ற சொல் குறிக்கும் இடம்

அ ) முன்னிலை ☐ ஆ ) படர்க்கை ☐

இ ) தன்மை ☐ ஈ ) ஒருமை ☐

23. போர்வீரர் தங்கியிருந்து போர் செய்யும் இடம்

அ ) கோட்டை ☐ ஆ ) அரண்மனை ☐

இ ) அந்தப்புரம் ☐ ஈ ) பாசறை ☐

24. ________________ உயிர்களிடத்தில் அன்பாய் இருப்போம்.

அ ) அவர்கள் ☐ ஆ ) நீங்கள் ☐

இ ) நீ ☐ ஈ ) நாங்கள் ☐

25. இடையின மெய்கள்

அ ) க் ச் ட் த் ப் ற் ☐ ஆ ) ங் ஞ் ண் ந் ம் ன் ☐

இ ) ய் ர் ல் வ் ழ் ள் ☐ ஈ ) க் ங் ச் ட் த் ந் ☐

புள்ளிகள் 25

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

''நீர் இன்றி அமையாது உலகு'' என்று கூறியவர் வள்ளுவர். நீர் மக்களுக்கு மட்டுமன்றி அனைத்து உயிர்களுக்கும் அகத்தியமானது. நிலைத்திணைகள் வளர்வதற்கு நன்னீர் தேவைப்படுகிறது. உலகின் பெரும் பகுதி கடலால் சூழப்பட்டுள்ளது. நாம் உயிர் வாழ்வதற்கும் பயிர்த்தொழிலுக்கும் தேவையான நீரை மழையில் இருந்து பெறமுடியும். ஆனால் மழைநீரின் சிறு பகுதியை மட்டுமே நாம் பயன்படுத்துகின்றோம். எஞ்சிய மழைநீரானது கடலில் கலந்து வீணாகிறது. இதனால் நன்னீர்ப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதனை ஈடுசெய்ய, கிணறுகளைத் தோண்டுவதனால் நிலத்தடி நீர்வளம் குறைகின்றது.

1. நிலைத்திணைகள் வளர்வதற்குத் தேவைப்படும் நீர் எது?

___________________________________________

2. ''நீர் இன்றி அமையாது உலகு'' என்று கூறியவர் யார்?

___________________________________________

3. எதனால் நிலத்தடி நீர்வளம் குறைகின்றது?

___________________________________________

___________________________________________

4. நாம் எவற்றுக்குத் தேவையான நீரை மழையிலிருந்து பெறமுடியும்?

___________________________________________

___________________________________________

5. உலகின் பெரும் பகுதி எதனால் சூழப்பட்டுள்ளது?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. அநுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சி செய்த மன்னன் யார்?

___________________________________________

2. போர்த்துக்கேயரினால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

___________________________________________

3. தொழிற்பாடல்கள் எப்போது பாடப்படும்?

___________________________________________

4. சிங்கள ஆட்சியாளரால் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளில் இரண்டைத் தருக.

___________________________________________

5. சொற்பொருள் தருக.

   மேழி ______________________

   ஈகை ______________________

6. சுட்டாலும் வெண்மை தருவது எது என ஔவையார் கூறுகின்றார்?

___________________________________________

7. குழந்தையை உறங்கவைப்பதற்காகப் பாடப்படும் நாட்டார் பாடல் எது?

___________________________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி; கவிதையை முழுமையாக்குக.**

# தேனீ

| | | | | |
|---|---|---|---|---|
| வண்ண | கூட்டில் | செடிகள் | போதல் | தேனீ |

வண்ணச் சோலை தன்னிலே
வளரும் ____________________ பலவுமே
வளரும் செடிகள் மீதிலே
____________________ மலர்கள் தோன்றுமே

மலர்கள் தம்மைத் தேடியே
____________________ வருதல் உறுதியே
தேனீ தேனை வாரியே
கொண்டு ____________________ திண்ணமே

கொண்டு சென்ற தேனையே
____________________ சேர்த்தல் ஆகுமே
கூடு தன்னை மாந்தர்கள்
குலைத்து விடுதல் உண்மையே

புள்ளிகள் 05

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

சேயோன் பள்ளி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அவன் வரும் வழியில் ஆற்றங்கரையில் நின்ற கொக்குகளைப் பார்த்தான். அவ்வேளை சிறுவர்கள் ஆற்றில் மகிழ்ச்சியாக நீந்திக் கொண்டிருந்தனர். சேயோன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது திடீரென ஒரு சிறுவன் நீரில் மூழ்கத் தொடங்கினான். உடனே அவனுடைய நண்பர்கள் ஓடிச் சென்று அவனைக் காப்பாற்றினர்.

1. இடப்பெயர் ஒன்று தருக.

_______________

2. பலர்பாலுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

_______________

3. இறந்தகால வினைமுற்று ஒன்று எழுதுக.

_______________

4. ஆண்பால் சொல் ஒன்று எழுதுக.

_______________

5. படர்க்கைச் சொல் ஒன்று தருக.

_______________

6. பலவின்பாலுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________

புள்ளிகள் 12

## ஆ) ஒவ்வோர் எடுத்துக்காட்டுகள் தருக.

தொழிற்பெயர் _______________

முன்னிலை _______________

பெண்பால் _______________

புள்ளிகள் 03

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. கிளி ____________________ மிக்க பறவை. இதன் ____________________

   சிவப்பு நிறம் கொண்டது.

   ( அலகு, அழகு )

2. கிழக்கு வானில் கதிரவனின் ____________________ தெரியும் வேளை

   பறவைகள் ____________________ எழுப்பும்.

   ( ஒலி, ஒளி )

3. அம்மா ____________________ அடுப்பில் சமைத்த ____________________

   சுவையாக இருந்தது.

   ( கறி, கரி )

4. நான் வானொலியில் தலைவரின் ____________________ யைக்

   கேட்டுக்கொண்டு எனது நூலுக்கு ____________________ போட்டேன்.

   ( உரை, உறை )

5. ஆசிரியர் ____________________ யில் இருந்த மாணவர்களை

   ____________________ வட்டமாக நிற்கும்படி கூறினார்.

   ( அறை, அரை )

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நாங்கள் என்றும் உண்மை பேச வேண்டும். உண்மை பேசுவோரை உலகம் மதிக்கும். திருக்குறள் உண்மை பேச வேண்டும் எனக் கூறுகின்றது. உண்மை பற்றிக் கூறும் வேறு பல நூல்களும் உள்ளன. அவற்றைப் படித்து நாங்கள் என்றும் உண்மையே பேசுவோம்.

புள்ளிகள் 05

**8) தரப்பட்டுள்ள பழமொழிகளைப் பொருத்தமாக இணைக்குக.**

| | |
|---|---|
| கண்பார்த்தால் | குன்றி மணி மங்காது. |
| அரசனில்லாத நாடு | இறகு போடாது. |
| குப்பையில் கிடந்தாலும் | நீர் விலகுமா. |
| நீர் அடித்து | கை செய்யும். |
| மயிலே மயிலே என்றால் | அச்சில்லாத தேர். |

புள்ளிகள் 05

**9) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.**

1. ஒழுக்கம் ________________ தரலா னொழுக்க

   முயிரினு மோம்பப் படும்

   ( விழுப்பம், இழுப்பம், எழுப்பம் )

2. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்

   பேரா விடும்பை ________________

   ( வரும், தரும், இரும் )

புள்ளிகள் 05

**10) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் பண்பாடு
- ✸ தமிழீழ நாடும் விடுதலைப் போராட்டமும்
- ✸ எனது வீட்டுத்தோட்டம்
- ✸ கோடைகாலமும் கடற்கரைக் காட்சியும்

புள்ளிகள் 15